ஆதிதிராவிடர் - பழங்குடியினருக்கு - தாட்கோ மூலம்

கிடங்கு மேலாண்மை - பிக்கர் - பேக்கர் பயிற்சிகள்!

சென்னை மாவட்ட ஆட்சியர் தகவல்!

சென்னை, அக். 13-

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சார்ந்தவர்களுக்கு, தளவாடங்கள் மற்றும் விநியோக சங்கிலி துறை (Logistics and Supply Chain Sector) மூலம் கிடங்கு மேலாண்மை (Warehouse Management), கிடங்கு பிக்கர் மற்றும் பேக்கர் (Ware house Picker & Packer) பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளது என சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சார்ந்தவர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான தொழில் பயிற்சி திட்டங்களை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக ,தளவாடங்கள் மற்றும் விநியோக சங்கிலிதுறை (Logistics and Supply Chain Sector) மூலம் கிடங்கு மேலாண்மை (Warehouse Management), கிடங்கு பிக்கர் மற்றும் பேக்கர் (Ware house Picker & Packer) பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளது.

கிடங்கு மேலாண்மை (Warehouse Management) பயிற்சிக்கு டிப்ளமோ, மற்றும் ஏதேனும் பட்டப் படிப்பில் தேர்ச்சியும், கிடங்கு பிக்கர் மற்றும் பேக்கர் (Warehouse Picker & Packer) பயிற்சிக்கு 10ஆம் மற்றும் 12ஆம் வகுப்பு, தொழிற்பயிற்சியில் (ITI) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இதற்கானதகுதிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும். குடும்ப வருமானம் ஆண்டிற்கு ரூ.3.00 லட்சத்திற்குள் இருக்க வேண்டும்.

இப்பயிற்சி முடித்த உடன் பயிற்சி அளிக்கும் நிறுவனத்தின் மூலம் வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும். இப்பயிற்சியில் சேருவதற்கு தாட்கோ இணையதளம் w.w.w.tahdco.com சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, தெரிவித்துள்ளார்.

குமரி சங்கமம் - நம்ம ஊறு திருவிழா இரண்டாம் நாள் நிகழ்ச்சி!

சுற்றுலாப் பயணிகள் பல்லாயிரவர் கண்டு களித்தனர்!

மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகு மீனா தகவல்!

கன்னியாகுமரி, அக் 13-

தமிழ்நாடு அரசின் ஆணைக்கிணங்க திருநெல்வேலி மண்டல கலைப்பண்பாட்டுத்துறையின் சார்பில், கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி திரிவேணி சங்கமம் கடற்கரை பகுதியில் நடைபெற்ற பிரம்மாண்டமான குமரி சங்கமம் -நம்ம ஊரு திருவிழா நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகு மீனா, 11.10.2024 அன்று முரசு கொட்டி துவக்கி வைத்தார்கள்.

இத்திருவிழாவில் திருநெல்வேலி மண்டலத்தில் நிகழ்த்தப்பட்டு வரும் பாரம்பரிய நாட்டுப்புறக் கலைகளான கொம்பு தப்பு, நையாண்டிமேளம், கரகாட்டம்,சிலம்பாட்டம், தப்பாட்டம், ஒயிலாட்டம், கணியான்கூத்து, தேவராட்டம், மாடாட்டம், மயிலாட்டம், குதிரையாட்டம், மரக்கால் ஆட்டம், தெம்மாங்கு பாடல், வில்லிசை, களியலாட்டம் மற்றும் தோல் பாவைக்கூத்து போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நேற்றைய தினம் நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து நேற்று (12.10.2024) சாத்தூர் கே.பி.நாகராஜன் குழுவினரின் நையாண்டி மேளம், கரகாட்டம், சிவகாசி கலைசுடர்மணி கே. பால்ராஜ் குழுவினரின் கிராமிய கலை நிகழ்ச்சிகளும், தச்சநல்லூர் ஆர். சங்கரபாண்டி குழுவினரின் கணியான்கூத்து நிகழ்ச்சியும், தோவாளை கலைமாமணி பரமசிவராவ் குழுவினரின் தோல் பாவை கூத்து நிகழ்ச்சியும், மேல்புறம் கலைவளர் மணி வின்சென் குழுவினரின் களரி நிகழ்ச்சியும், சங்கரன்கோவில் கலைவளர் மணி கு.முத்துராமலிங்கம் குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சியும், மரிய டேவிட் குழுவினரின் பறை, கரகம், ஒயிலாட்டம், கிராமிய பாடல், சாட்டை குச்சி ஆட்டம் உள்ளிட்ட பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

மேலும் பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளை நடத்திய குழுவினரை பாராட்டி பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இரண்டு நாட்கள் நடைபெற்ற குமரி சங்கமம் - நம்ம ஊரு திருவிழா நிகழ்ச்சியில் சுமார் 375 கலைஞர்கள் கலந்து கொண்டனர். இரண்டாம் நாள் நடைபெற்ற குமரி சங்கமம் - நம்ம ஊரு திருவிழா கலை நிகழ்ச்சிகளை ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கண்டு களித்தனர்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் கலைப்பண்பாட்டுத் துறை உதவி இயக்குநர் கோபாலகிருஷ்ணன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பா.ஜாண்ஜெகத் பிரைட், மாவட்ட சுற்றுலா அலுவலர் காமராஜ், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் திருமதி.எஸ்.செல்வலெட்சுஷ்மா, கன்னியாகுமரி பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.ரமா தேவி, கிராமிய கலைஞர்கள், பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி மீனவ ஐக்கிய பஞ்சாயத்து சபை சார்பாக நடைபெற்ற டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழா மாளிகை திறப்பு விழா நடைபெற்றது. பா.கோதண்டன் தலைமையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, மாளிகை திறந்து வைத்தார்.உடன் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, ஐட்ரீம்ஸ் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, இரா.மதிவாணன், இரா.லட்சுமணன், இரா. செந்தில்குமார், பவித்ரா நரேஷ்குமார் எம்.சி, உமா சரவணன், பானுமதி சுந்தர், ஆர்.வெற்றிவீரன், ஆர்.டி.ராஜா, எஸ்.கே.இளங்கோ, நா.கோதண்டன், மா. நாகராஜன், பொ.து. ராஜா, என். கிருஷ்ணன், சி.பிரேம்குமார், கிருஷ்ணன் ராஜ், பவர் குப்பம் ராமமூர்த்தி, ஜே.பிரேம் ஆனந்த், பா.ஆறுமுகம், கே.ஜெகதீசன், எஸ்.டி.செல்வம்மணி, எஸ்.வினோத்குமார், சீமான் ரங்கராஜ், என். கிருஷ்ணன், ரகு பிரசாந்த், ஏ.அற்புதம், தா.ஜெயபால், வீதி ரமேஷ், சே.டில்லிபாபு, ஏ.சிவராஜ், எம்.ஹரி கிருஷ்ணன், இரா. கரிகாலன், இரா. பிரகாஷ் சீனிவாசன், வீ.வடிவேல் ஆர். சுப்பிரமணி, ஆர்.டி.ராஜா, எம்.எஸ்.சரவணன், டி.மணி, பி.மணி, குப்பராஜ், ஆர்.முத்துவீரன் நன்றி கூறினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

இராயபுரம் ப. பொன்னுரங்கம்

அக்டோபர் 13 (1989)

பள்ளிப் பருவத்திலேயே திராவிட இயக்க கொள்கையினால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் உறுப்பினராக சேர்ந்தவர்.

இராயபுரம் பகுதிக் கழகச் செயலாளராகவும், கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

இராயபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர்.

இந்தித் திணிப்பை எதிர்த்து நடைபெற்ற அறப்போராட்டம், விலைவாசிய உயர்வு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1986ஆம் ஆண்டு மத்திய அரசின் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து அரசியல் சட்டப்பிரிவை தீயிட்டு எரித்ததால் சட்டமன்ற உறுப்பினர் பதவியை இழந்தவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க

ஒன்றிய, மாநகர, பகுதி - பேரூர் சார்பு அணிகளுக்கான விண்ணப்பங்கள்!

மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, அறிக்கை!

தஞ்சாவூர், அக்.13.

தஞ்சை வடக்கு மாவட்டதிற்குட்பட்ட மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் சார்பு அணிகளுக்கான விண்ணப்பம் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுக்கிணங்க இளைஞர் அணி, மாணவர் அணி, ஐ.டி விங் ஆகிய அணிகளுக்கு நேர்காணல் நடைபெற்றுள்ளது. அதனை தொடர்ந்து கீழ் கண்ட விபரப்படி மற்ற அணிகளுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு நேர்கானல் செய்யப்பட உள்ளது. பொறியாளர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகியவற்றிக்கான விண்ணப்பங்கள் இணையதளத்திலோ அல்லோ கீழ்கண்ட தேதிகளில் மாவட்ட அலுவலகத்திலோ பொற்று கொள்ள வேண்டும்.

14.10.2024 திங்கள் காலை 10.00 மணிக்கு பொறியாளர் அணி, மதியம் 04.00 மணிக்கு மீனவர் அணிக்கும், 15.10.2024 செவ்வாய்கிழமை காலை 10.00 மணிக்கு விளையாட்டு மேம்பாட்டு அணி, மாலை 04.00 மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணிக்கும், 16.10.2024 புதன் காலை 10.00 மணிக்கு தொழிலாளர் அணி, மாலை 04.00 மணிக்கு ஓட்டுநர் அணி, 17.10.2024 வியாழன் காலை 10.00 மணிக்கு வர்தகர் அணி, மாலை 04.00 மணிக்கு தொண்டர் அணிக்கும், 18.10.2024 வெள்ளி காலை 10.00 மணிக்கு விவசாய அணி, மாலை 04.00 நெசவாளர் அணிக்கும், 19.10.2024 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு விவசாய தொழிலாளர் அணி, மாலை 04.00 மணிக்கு சுற்றுச்சூழல் அணிக்கும், 20.10.2024 ஞாயிறு காலை 10.00 மணிக்கு அயலக அணி மாலை 04.00 வழக்கறிஞர் அணிக்கும், 21.10.2024 காலை 10.00 மணி சிறுபான்மை நல உரிமைப்பிரிவு, மாலை 04.00 மணிக்கு ஆதிதிராவிடர் நலக்குழு அணிக்கும், 22.10.2024 காலை 10.00 மணிக்கு இலக்கிய அணி மாலை 04.00 மணிக்கு கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அணிக்கும் விண்ணப்பங்கள் வழங்கப்பட உள்ளது. கழக உணர்வு உள்ள, கழக பணிகளில் ஈடுபாடுள்ள செயல் பாட்டாளர்கள், அணிகளின் துறைகளுக்கு சம்மந்தப்பட்ட தகுதியான நபர்கள், தாய் கழகங்களில் வாய்ப்பு கிடைக்காதவர்கள் இந்த அறிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் விண்ணப்பம் வழங்கப்படும் தகவலை அனைவருக்கும் தெரியபடுத்திட வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் மூலமாகவும் அல்லது மாவட்ட அணி அமைப்பாளர்கள் மூலம் மாவட்டக்கழகஅலுவலகத்திலோ வழங்கிட கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு : இளைஞர் அணி, மாணவர் அணிகளுக்கு வார்டு, கிளைக் கழகங்கள் தோறும் அமைப்பு ஏற்படுத்தவும், தகவல் தொழில்நுட்ப அணிக்கு பாக அளவில் ஒருவரை நியமிக்கவும், மேற்கண்ட பொறுப்புகளுக்கும் இளைஞர்கள், மாணவர்கள், சமூக வலைதளங்களில் ஈடுபாடு கொண்ட தகுதியான நபர்களை தேர்ந்தெடுத்து மாவட்டக் கழகத்திற்கு அவர்களின் விபரங்களை வழங்கிட வேண்டும்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில்

பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள்!

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி ஆய்வு மேற்கொண்டார்!

தருமபுரி, அக். 13-

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி நேற்று (12.10.2024) ஆய்வு மேற்கொண்டார்.

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பாளையம்புதூர் ஊராட்சி, தொம்பரகாம்பட்டியில் ரூ.11.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் மேல் நிலை நீர்த்தேக்க தொட்டியினையும், டொக்குபோதனஹள்ளியில் பூவல்மடுவில் இலங்கைவாழ் தமிழர் மறுவாழ்வு மையத்தில் ரூ.28.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் தடுப்பு சுவர் கட்டுமான பணிகளையும், புதியதாக ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய 12 வீடுகளையும், மலையப்பா நகர் பகுதியில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் மூலம் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வீடுகள் என மொத்தம் ரூ.118 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி. சாந்தி ஆய்வு மேற்கொண்டு, பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் விரைந்து முடித்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், டொக்குபோதனஹள்ளி ஊராட்சி, வெள்ளக்கல் அங்கன்வாடி மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி ஆய்வு மேற்கொண்டு, சமையலறை, குழந்தைகளுக்கான அடிப்படை வசதிகள் முறையாக பராமரிக்கப்படுகிறதா என்பது குறித்தும் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது, நல்லம்பள்ளி வட்டாட்சியர் திரு.சிவகுமார், நல்லம்பள்ளி வட்டார வளர்ச்சி அலுவலர் லோகநாதன், உதவி பொறியாளர்கள் திருமதி.சுமதி, ஸ்ரீதர் உட்பட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, நேற்று (12.10.2024) தேனாம்பேட்டை மண்டலம், வார்டு 141க்குட்பட்ட சி.ஐ.டி. நகர் சென்னை மேல்நிலைப்பள்ளியில் உள்ள நிவாரண முகாமினைப் பார்வையிட்டு, அங்கு தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ள உணவு தயாரிக்கும் சமையலறையினை ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், தலைமைப் பொறியாளர் (பொது) எஸ். ராஜேந்திரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

எல்லோர்க்கும் இனிய பண்பாளர் எழுத்துச்சிற்பி முரசொலி செல்வம்!

அமெரிக்கா தமிழ்ப்பணிக் கழகத்தின் தலைவர் வா.மு.சே.கவிஅரசன் இரங்கல்!

நியூயார்க், அக். 13-

அமெரிக்கா தமிழ்ப் பணிக் கழகத்தின் தலைவர் வா.மு.சே.கவி அரசன் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

தமிழ்ச் சமுதாயத்தின் ஒளி விளக்காக திகழும் தி.மு.கவிற்கும், தமிழ்நாட்டின் முதன்மை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உன்னத ஆட்சிக்கும் உறு துணையாக இருந்தவர்,

பெருந்தகையாளர் அன்பிற்குரிய முரசொலி செல்வம் அவர்கள் அரசியல் மதி நுட்பத்தோடு 'சிலந்தி' என்ற புனைப் பெயரில் முரசொலியில் கட்டுரை எழுதி பகைமைகளுக்கு தெளிவு தந்த எழுத்துச்சிற்பி!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தொண்டறங்களுக்கு துணை நின்ற தூயவரின் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த மன வேதனை அடைந்தோம். அமெரிக்கா தமிழ்ப் பணிக் கழகத்தின் சார்பாக ஆழ்ந்த வருத்தத்தோடு துயரத்தில் பங்கேற்று ஆறுதல் கூறுகிறோம்.

இவ்வாறு அவர் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சி.பி. பவளவண்ணன்

அக்டோபர் 13 (1975)

சென்னை, சைதை பகுதியில் இளம் வயதிலேயே தொண்டராக பணியாற்றி கழக வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர்.

தலைவர் கலைஞர்மீது மாறா அன்பும் பாசமும் கொண்டவர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். பேச்சாளராகவும் விளங்கியவர்.

1964ல் சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினராகவும் – 1967ல் சென்னை மாநகர துணை மேயராகவும் பொறுப்பு வகித்தவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.